1982 பிப்ரவரி 8]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிவாரணப் பிரச்னையில் விவசாயிகளுக்கு அரசு கடன் வழங்கி கிணறு தோண்டும்போது. எந்த டத்தில கிணறு தோண்டுவது என்று அரசே பார்வையிட்டு, அந்த இடத்தில் தோண்டும்போது, தண்ணீர் இல்லை யென்றால் அல்லது ஊற்று கிடைக்காவிட்டால் என்ன செய்வது என்பது பற்றி அரசே பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தர்மபுரியில் ஸ்டேடியம் கட்டும் திட்டம்.

* **வினா எண் 87—திரு. எஸ். அரங்கநாதன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரியில் ஸ்டேடியம் கட்டும் திட்டம் ஏதும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அது எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) : ஆம். (ஆ): தருமபுரி ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு அருகாமையில் காலியாக உள்ள நிலத்தை விளையாட்டரங்கம் கட்டுவதற்காக தருமபுரி மாவட்ட விளையாட்டு மன்றத்திற்கு மாற்றிக் கொடுக்குமாறு அம் மாவட்ட ஆட்சித் தலைவர் நில வருவாய் ஆணையர் மூலம் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். சில நிபந்தனைகளுக்குட்பட்டு அந்நிலத்தை நீண்டகாலக் குத்தகைக்குத் தர சம்மதிப்பதாகப் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். இது அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்த நிலம் மாற்றம் செய்யப்பட்ட பின்னர், விளையாட்டு அரங்கம் கட்டப்படும்.

பணியிலிருக்கும் பொறியியல் பட்டதாரிகளின் மேல்நிலைப் படிப்புக்கான மாலை நேர வகுப்புகள்.

* **வினா எண் 88 — திரு. சோ அழகர்சாமி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொறியியல் பட்டதாரிகள் மேல்நிலைக் கல்வி (M.E) படிப்பை பணியில் இருந்துகொண்டே மாலை நேரத்தில் பயிலச் செய்ய அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பொறியியற் பட்டதாரிகள் தற்போது பணியில் இருந்துகொண்டே, மற்ற முழு நேர மாணவர்களுடன் சேர்ந்து பட்ட மேற்படிப்பைத் தொடரும் வண்ணம் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. ஆயினும் இவர்களை மாலை நேரத்தில் பயிலும் வண்ணம் செய்வதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

[1982 பிப்ரவரி 8

[முற்பகல் 9-40]

திரு. சோ. அழகர்சாமி : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது எம். இ. படிப்பிற்காக பொறியியல் பட்ட தாரிகளுக்கு ஏற்பாடு இருப்பதாகச் சொன்னார்கள். நான் கேட்பது, அவர்கள் பணியில் இருந்து கொண்டே மாலை நேரங் களில் படிக்க மற்ற மாணவர்களுக்குள்ள அதே வசதியை இவர் களுக்கும் ஏற்படுத்திக் கொடுக்க அரசு ஏன் முயற்சி செய்யக் கூடாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போதும் பணி யில் இருந்துகொண்டேதான் படிக்கிறார்கள். பணியில் இருந்து கொண்டு பகுதிநேரப்படிப்பாக சிலவற்றைப் படித்துக்கொண்டு சில பாடங்களை முழு நேர மாணவர்களோடு சேர்ந்து படிக் கிறார்கள். ஆகவே நான்கு ஸெமஸ்டரில் முழுநேர மாணவர்கள் முடிப்பதை இவர்கள் ஆறு செமஸ்டரில் முடிக்கிறார்கள். ஆகவே பணியில் இருந்துகொண்டே படிப்பதற்கு இப்போது வாய்ப்பிருக்கிறது. மற்றப்படி பகுதிநேரம் என்பதை இவர்களுக்கு முழுநேரம் முழுமையாக அதைச் செய்ய வேண்டுமென்றால் அதிக மாகச் செலவாகும், அதை மாணவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிவரும்.

திரு. சோ. அழகர்சாமி : இப்போது எந்தெந்தக் கல்லூரி களில் இந்த வசதி செய்யப்பட்டிருக்கிறது ? கோவையில் மட்டும் தான் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. சென்னையிலும் அந்த ஏற்பாடு இருக்கிறதா ? இல்லையெனில் இதை விரிவுபடுத்தி சென்னை, கோவை, திருச்சி, போன்ற இடங்களில் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள், வசதிகள் செய்து தரப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. சென்னையில் இருக்கும் என்று கருது கிறேன், பல்கலைக்கழகம் இருப்பதால்.

பாலிடெக்னிக்குகளில் டிப்ளமோ பெற்றவர்களை தொழிற் கல்லூரிகளில் சேர்ந்து படிக்க அனுமதிக்கும் திட்டம்.

* வினா எண் 89—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாடு அரசு பாலிடெக்னிக் பள்ளிகளில் படித்து டிப்ளமோ பெற்ற மாணவர்களை தொழிற்கல்லூரிகளில் பட்டப் படிப்பில் சேர்ந்து படிக்க வகை செய்யும் திட்டத்தை செயல் படுத்தும் செயற்குறிப்பு அரசு ஆலோசனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?